பக்கங்கள் நான்கு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 21 திங்கட்கிழமை (05 07 1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 219

# இன்று "கரும்புலிகள் தினம்" குடாநாட்டில் உணர்வுபூர்வ நிகழ்வுகளுடன் அனுஷ்டிப்பு

## வீர மறவர்களுக்கு மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 5

தமிழீழத்தில் இன்று கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கரும்புலி வீரர்களின் அதி உயர் தியாகத்தை — வீரத்தை — கௌரவிக்கும் முகமாக கரும்புலிகளின் நாள் கொண்டாடப்படுகின்றது.

முதலாவது கரும்புலி களத்தில் இறங்கி, வீரகாவியம் படைத்த நாளான ஜூலை 5 ஆம் திகதியே கரும்புலிகள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கரும்புலிகள் தினத்தை இன்று குடாநாட்டு மக்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க உள்ளனர். அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

இத்தினத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு குடாநாடுமுழுவதும் வீதிகள், சந்திகள் தோறும் மஞ்சள், சிவப்புத் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. எங்கும் சுவரொட்டிகள், பதாகைகள் காணப்படுகின்றன.

முக்கிய இடங்களிலும் — சந்திகளிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டு கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, மலர்தூவி அஞ்சலி தெரிவிக்கப்பட்டு வருகிறது.

கரும்புலிகள் தினத்தை பொட்டி இன்று பாடசாலைகள், அரச செயலகங்கள், வர்த்தக நிறுவனங்கள் இயங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார்த் தீவில் புலிகள் அதிரடி! இன்ஸ்பெக்டர், 4 பொலீஸார் பலி!!

## இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்த் தீவுப்பகுதியில் நேற்று முற்பகல் 11.20 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 4 பொலீஸார் உயிரிழந்தனர்.

சுமார் ஒன்றரை நிமிட நேரமே இந்த அதிரடித் தாக்குதல் நீடித்தது.

பேசாலையில் இருந்து மன்னார் பட்டினத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொலீஸாரின் ரூபர் வாகனம் மீதே தாராக்குண்டு என்ற இடத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் சப்-இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலீஸார் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்பதை ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன. (உ-ஏ-3)

### புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மன்னாரில் நேற்று முற்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி-56 ரகத் துப்பாக்கிகள் — 4
- ★ அதற்கான மகஸின் — 10
- ★ ஏ. கே. ஹோல்சர் — 2
- ★ நடுத்தர ரவைகள் — 340

(உ-3)

## கிழக்கில் செயற்படும் படைகளுக்கு மேலதிகமாக துருப்புக்கள் சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 5

கிழக்கு மாகாணத்தில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் முதலாவது விசேட படையணியில் (First Special Forces Brigade) மேலதிகமான துருப்புகளைச் சேர்த்துக்கொள்ளும் முயற்சியில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிதாக ஆட்களைத் திரட்டி, பயிற்சி வழங்கி உடன் யுத்தமுனைக்கு அனுப்பும் நடவடிக்கையில் இராணுவத் தலைமைப்பீடம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விசேட நேர்முகப் பரீட்சைகள் சில தினங்களுக்கு முன்னர் வெலிவாய, குருநாகலை, மாத்தறை, அநுராதபுரம், கண்டி, கனேமுல்ல ஆகிய இடங்களில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது விசேட படையணியில், முதலாவது

(4 ஆம் பக்கம் பார்க்க)

தீவிரவாதிகளிடமிருந்து

## காஷ்மீர், பஞ்சாப்பில் மீட்ட ஆயுதங்கள் தமிழக அரசுக்கு

### புலிகள் ஊடுருவலைத் தடுக்கவாம்

சென்னை, ஜூலை 5

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக, இந்திய மத்திய அரசு தமிழக மாநில அரசுக்கு நவீன ஆயுதங்களை வழங்கும்.

காஷ்மீர் மற்றும் பஞ்சாப் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகள் உட்பட — நவீன ஆயுதங்களை இதற்காக மத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கும்.

இந்திய மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் ராஜேஷ் பைலட் கடந்த வெள்ளியன்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்தியதை அடுத்து இது பற்றி முடிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பை முன்னிட்டு மத்திய — மாநில அரசாங்கங்கள் புலிகளுக்கு எதிராக கூட்டாக நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று ராஜேஷ் பைலட் செய்தியாளர்களிடம் பின்னர் தெரிவித்தார்.

ஜெயலலிதாவுடனான பேச்சுக்களின்போது தமிழக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு மீண்டும் நாளை கூடுகின்றது

கொழும்பு, ஜூலை 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை கூடவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக முடிவு செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா என்பது குறித்து நாளைய கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-3)

## சம்பள உயர்வு நிறுத்தம்: எதிர்க்கட்சிகள் கண்டனம்

### பொருளாதார நெருக்கடியில் அரசு!

கொழும்பு, ஜூலை 5

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை நிறுத்தியதற்கு எதிர்க்கட்சிகள் பலவும் அரசாங்கம் மீது பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

கோதுமை மா மற்றும் எரிபொருள்களின் விலைகளை உயர்த்தியமை, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, சுங்கவரி, மொத்த விற்பனவு வரி ஆகியவற்றை உயர்த்தியமை என்பன அரசாங்கம் பெரும் பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளதையே வெளிப்படுத்துவதாக அவை சுட்டிக்காட்டியுள்ளன.

வெளிநாட்டு உதவி பெறுவதற்காக — உலக வங்கியின் நிபந்தனைகளை நிறைவேற்றும் விதத்தில் — ஏழைகளுக்கு உதவும் ஜனசக்தி, மாணவர் இலவச மதிய உணவு ஆகிய திட்டங்களை நிறுத்துவதற்கு அரசு உறுதியளித்திருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன.

யுத்தம் தொடருமாயின் அரசு ஊழியர்களுக்கு உறுதி அளிக்கப்பட்ட சம்பள உயர்வு கிடைக்காது என்று ஸ்ரீ. ல. சு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக முகாமைத்துவம்:

## தனியார் துறையின் பங்கை பெற உலகவங்கி சிபார்சு

கொழும்பு, ஜூலை 5

பல்கலைக்கழகங்களின் முகாமைத்துவத்தில் தனியார் துறையின் பங்கையும் பெறும்படி அரசாங்கத்தை உலக வங்கி கோரியுள்ளது.

உயர்கல்விக்காகச் செலவழிக்கும் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக உலக வங்கி நம்புவதைத் தொடர்ந்தே முன்கண்ட கோரிக்கையை உலக வங்கி விடுத்துள்ளது.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் உலகின் தற்போதைய போக்கு ஆகிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு அலுமாரிகள். ஒன்றில் ஒரு கதவு முகக்கண்ணாடி மற்றது சகல பாவனைகளுக்கும் ஏற்றது. கட்டில் நியாயமான விலை. சக்தி, 387 A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதிக்கு முன்பாக) (26347)

### SPOKEN ENGLISH

Spoken English with Grammar and Literature ஆங்கிலத்தில் நன்றாக பேசப் பழக்கப்படுகின்றது. V N Kandasamy, A. I. B. [Part - I (London), (Inter – London) DiP – in - English, 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு அருகில்) கொக்குவில். (6308)

### கோழிகள்

நன்கு வளர்க்கப்பட்ட ஊர்க்கோழிகள், நல்லினக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு G காந்தன் (சிறி கடை அருகில்), தபாற்கட்டை சந்தி, அரியாலை. (26362)

### அல்சேஷன் நாய்

அழகிய சடை இன அல்சேஷன் ஆண் நாய் (ஒன்பது மாதங்கள் நிரம்பியது) நாற்பது நாட்கள் நிரம்பிய ஆண், பெண் குட்டிகளும் விற்பனைக்குண்டு. செ ஆனந்தன், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (26355)

### இலவச திருமண சேவை

32, வயது, மிருகசீரிடம் செவ்வாய் 4, கனடாவிலுள்ள மணமகனுக்கு மணப்பெண் கனடாவில் விரும்பத்தக்கது. சகல மணமக்களுக்கும், ஞாயிறு காலையில் சந்தியுங்கள். து. விமலா, இலவச திருமணசேவை, யாழ் நாச்சிமார் கோவிலடி. [26315]

## சயம்பு தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய 105ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய சயம்பு தின விழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் கொத்தணி அதிபர் செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. அருளானந்தம் கலந்துகொள்வார். கல்லூரி நூற்றாண்டு நினைவுப் பேருரையும் ''காரை ஒளி'' என்னும் இயல் இசை நாடகமும் நிகழ்ச்சியில் இடம்பெறும். (த)

## முறைசாரா கல்வி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 5

1992ஆம் ஆண்டில் முறைசாராக் கல்விப் பிரிவு, தொழில்திறன் பயிற்சி, குறுங்காலப் பயிற்சி, வார இறுதி ஆங்கிலக் கல்வி வகுப்பு ஆகியவற்றுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை அதிபர்களிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், முறைசாராக் கல்வி இணைப்பாளருமான திரு. ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (த)

கடற்கரையை அண்டிய பகுதிகளில்

# அதிக விளைவைத் தரக்கூடிய புதிய நெல்லினம் விநியோகம்

ஆராலி, ஜூலை 5

கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள வயல்களில், உவர்த்தன்மையை தாங்கி வளர்ந்து அதிக விளைவைத் தரக் கூடிய புதிய நெல் இனங்களை விவசாயிகளுக்கு விநியோகிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிவப்பு நிற அரிசியைக் கொண்ட பி டபிள்யு 272-6பி, ஏஜி 69-2 ஆகிய நெல் இனங்களே எதிர்வரும் கால போகத்தில் விநியோகிக்கப் படஉள்ளன. இவை முறையே 3மாதங்கள் 3½ மாதங்கள் வயதுடைய நெல் இனங்களாகும்.

இந்த நெல் இனங்கள் தேவைப்படுவோர் தொல்புரம் கமநல சேவை நிலையத்தில், புசல் ஒன்றுக்கு ரூபா 200 முற்பணமாகச் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும்—

ஏனைய திருந்திய நெல் இனங்களைப் பெற விரும்புவோரும் முற்பணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (த-12)

உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தில்

## தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தில் இயந்திரம் மற்றும் மின்சாரமும், எலெக்ரோனிக்கும் தொழில் நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு - 2 என்னும் முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக 100 ரூபா பரீட்சை ஆணையாளரின் பெயரில் ஏதாவது ஒரு தபாற்கந்தோரில் செலுத்தி பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் ஜூன் 3 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் வெளியாகியுள்ளன. (த-162)


கொக்குவில் மேற்கு
அருள்மிகு
ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர்
ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

நாளை (06-07-1993) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

தினமும் இரவு 8-00 — 9-00 மணிவரை
கம்பவாருதி இ. ஜெயராஜ் அவர்களின்
(கம்பன் கழக அமைப்பாளர்)
கம்பராமாயண தொடர் விரிவுரை
(சென்ற வருடத் தொடர்ச்சி)
நடைபெறும்.

— ஸ்ரீசொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தானம்.
(26368)



ஊரெழு கிழானைப்பதி
பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய
வருடாந்த மஹோற்சவம் - 1993

12-07-1993 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 22-07-1993இல் இரதோற்சவமும், 23-07-1993 இல் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

வீதியிலுள்ள கடைகள் 08-07-1993 வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

செயலாளர்,
பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய பரிபாலனசபை.
[26361]


### 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 07 — 1929



மறைவு: 28 — 06 — 1991

#### அமரர் இ. தில்லைநடேசன்

திதி: 05 - 07 - 1993

ஆருயிர்த் தெய்வமே அன்பின் ஒளிவிளக்கே
பாசமுள்ள செல்வமே பண்பின் இருப்பிடமே
ஆண்டிரண்டு போனாலும் ஆறுமோ எமது துயர்
குமரக் கோட்ட முருகன் திருவடிநிழலில்
இன்புற்றிருக்க வேண்டுதல் செய்யும்;

மனைவி, அம்மா, பிள்ளைகள்.

'குமரபதி'
உடுவில். (26350)

### பாடசாலைகளில்

யாழ் புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் ஆங்கில தினம் நாளை செவ்வாய் காலை 10மணிக்கு நடைபெறும். முதன்மை விருந்தினராக யாழ். தெற்கு கொத்தணி அதிபர் திருமதி எவ். சின்னத்துரையும், சிறப்பு விருந்தினராக யாழ் பேராலய பங்குத் தந்தை அருட்திரு ஜெபநேசனும் கலந்து கொள்வர்.

o o o

சித்தன்கேணி பிளவத்தை அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும் போட்டியில் பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. ஏ. கனகசுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு சி. டாஸ், பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழக இணைப்பாளர் திரு. கலாநேசன், முன்னாள் பாடசாலை அதிபர் திரு. இ. தாமோதரம்பிள்ளை, விடுதலைப் புலிகளின் சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் ஆகியோரும் கலந்து கொள்வர். (த)

o o o

மந்திகை, ஜூலை 5

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் இமையாணன் மேற்கு உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் விநாயகர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் விநாயகர் சனசமூக நிலையம் முன்பாக நடைபெறும். (உ-87)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 5

கிளிநொச்சியில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாம் லெப்டினன்ட் கேடயன் (பாலசுப்பிரமணியம் சர்மா ஹரிகரன் — கொழும்பு) என்பவர் வீரச்சாவடைந்தார். (இ-5)

## இருவருக்கு அதிகாரிகள் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்புக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் கொழும்பில் நடந்த நேர்முகப்பரீட்சை முடிவுகள் தற்சமயம் வெளிவந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களில் திரு. து வைத்திலிங்கம், திரு. க. சண்முகநாதன் ஆகியோர் முதலாம் வகுப்புக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக கடித மூலம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. து. வைத்திலிங்கம் யாழ் மாவட்ட பிரதி ஆணையாளராகவும், திரு. க. சண்முகநாதன் யாழ். தீவுப் பகுதி மேலதிக அரசாங்க அதிபராகவும் தற்சமயம் பணிபுரிந்து வருகின்றனர். (உ-3)

### ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேக தினம் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படும். பகல் சங்காபிஷேகமும், மணவாளக் கோல உற்சவமும் இடம் பெறும். (க-161-30)

o o o

கொழும்புத்துறை, உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருநாள் இன்று திங்கள் மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

7ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை சுற்றுப் பிரகாரம் என்பன நடைபெறும்.

8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் பூசையைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம்பெறும். [த-51]

o o o

மந்திகை கண்ணகை ஆலயத்தில் இன்று ஏகதின இலட்சார்ச்சனை நடைபெறும். இன்று விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

காலை 5 மணிக்கு 108 சங்குகளால் அம்பிகைக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து காலை 6 மணியளவில் இலட்சார்ச்சனையும் நடைபெறும். (உ-87-109)

o o o

அபிராமியந்தாதி 39 ஆவது செய்யுள் ஆய்வுரை நூல் வெளியீடு வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் இன்று பகல் நடைபெறும். இந்த ஆய்வு நூல் தொடரை பஜனைச் சபையினர் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றனர். (உ-28)

o o o

யாழ். கொக்குவில் மேற்கு சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும். உற்சவ காலத்தில் தினமும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் கம்பராமாயணத் தொடர் விரிவுரையை நிகழ்த்துவார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கரும்புலிகள் தினம்

மனிதர்கள் பிறக்கும் போதே மரணமும் நிச்சயமாகி விடுகிறது ஆனால் அந்த மரணம் எப்போது நிகழும் என்பது எவருக்குமே தெரியாது சிலருக்குச் சில வேளைகளில், சில நிகழ்வுகளின் நிமித்தம் மரணபயம் வருவதுண்டு. ஆனால் மரணம் சம்பவிக்கப் போகின்ற நேரம் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியாது.

தமக்கு இயற்கையாக வரக்கூடிய மரணத்துக்கே அஞ்சுபவர்கள் மனிதர்கள். அத்தகையோரே உலகில் அனேகர். மரணத்துக்கு அஞ்சாதவர்கள் வீரர்களும் ஞானிகளும் மட்டுமே.

ஆயிரம் ஆயிரம் வீரர்களை ஈன்றெடுத்த பெருமைக்குரியவள் ஈழத் தமிழ்த் தாய் தங்கள் மதிப்பிடற்கரிய உயிரைத் துச்சமென மதித்து, தமிழ் மண்ணைக் காக்கவும், தமிழ் மக்களைக் காக்கவும் களத்தில் குதித்திருக்கும் போராளிகள் மரணத்துக்கு அஞ்சாதவர்கள். தமக்கு மரணம் நிகழும் என்ற நிச்சயத்துடனேயே களத்தில் இறங்குகிறார்கள்.

மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காகத் தங்கள் உயிரைத் தற்கொடை தரும் மறவீரர்கள். அவர்களில், தங்களது மரண நேரத்தைத் தெரிந்து கொண்டு ஆன்ம உறுதியுடன் எதிரி இலக்கை நோக்கிச் செல்லும் கரும்புலிகள் உன்னதமானவர்கள். சாதாரண மனிதர்களை விட மலையளவு மகத்தானவர்கள்.

ஆறு வருடங்களுக்கு முன்னர் இதே நாளில் — ஜூலை ஐந்தில் — முதலாவது கரும்புலி மில்லர் நெல்லியடியில் நடத்திய அதிரடித்தாக்குதல் எதிரிப் படையை அதிர்ச்சியுற வைத்தது. இராணுவ ரீதியாகத் தமிழர்களை இலகுவில் வென்று விடலாம் என்று இறுமாந்திருந்த இலங்கை இராணுவத்தின் குடலைக் கருக்கியது. குலை நடுக்கம் பிடிக்கச் செய்தது.

தமக்கு வெற்றி கிடைத்து விட்டதாக எண்ணியிருந்த இராணுவத்தை திரும்பிப் பார்க்கச் செய்தது கரும்புலித் தாக்குதலே. தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இப்போதைய வலுவான நிலையை எய்துவதற்கு முதலாவது கரும்புலி மில்லரின் தாக்குதல் பெரும் திருப்புமுனையாகத் திகழ்ந்தது எனலாம்.

எண்ணிக்கையிலும், நவீன இராணுவ வசதிகளிலும் வளம் பெருத்த, இராட்சத ஸ்ரீலங்காப் படைகளை எதிர்கொண்டு தோற்கடிக்கச் செய்வதற்கு, சிறிய அளவினதான, வளம் குறைந்த விடுதலை இயக்கம் ஒன்றுக்குப் புதிய போர் வடிவங்களும், போர் உத்திகளும், யுத்த யுக்திகளும் தேவைப்பட்டன.

அந்தத் தேவையின் பொருட்டு, தலைவர் பிரபாகரன் வகுத்த புதிய போர் வடிவங்களில் கரும்புலிகள் தாக்குதல் முறையும் ஒன்றாகும். குறைந்த உயிரிழப்புடன் எதிரிக்கு அதிகளவு சேதத்தை விளைவிக்கும் சக்தியும், வினைத் திறனும் மிகுந்த போர் வடிவமாக அது மிளிர்கிறது.

கரும்புலிகள் அணி, தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை வேகமாக நகர்த்தப் பேருதவியாக இருக்கும் ஒப்புவமை இல்லாத ஒரு போர்க் கருவி என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மதிப்பிடப் பட்டுள்ளது. கரும்புலிகள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பெரும்பலமாகவும் விளங்குகின்றனர்.

அத்தகைய மண்ணின் மகத்தான மறவீரர்கள் மக்களால் என்றென்றும் மனதிருத்திப் போற்றப்பட்த் தகைமை சான்றவர்கள்.

# தேசிய இயக்க சக்திக்குப் பெரும் உந்துவிசை கரும்புலிகள் அணியே

''கரும்புலிகள்'' என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகிவிட்டது.

கரும்புலித் தாக்குதலை நடத்தும் விடுதலைப் புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக்கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும், மன ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்களின் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன.

இன்று, உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு.

ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில்நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்கு, தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலம் இழக்கச் செய்து, தங்களது அடக்கு முறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவுக்கு ஆள் ஆயுத-தொழில்நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத் திறன்களில் இருந்து மிக உச்சப்பயன்களைப் பெற்றாலொழிய, போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

### உன்னதமான போர் வடிவம்

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும அளவுக்கு, பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச் சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக் கூடிய ஒரு படை அணி ஒன்றை அமைக்கும் யோசனையை, தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டுள்ளார்.

அந்த எண்ணக்கருவைச் செயற்படுத்தக்கூடிய ஆற்றலை புலிவீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார்.

1981 ஆம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொழும்பில் வைக்கப் பட்டிருந்த பொழுது, தற்கொலைப்படை அணி ஒன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர, பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பல்வேறுகாரணங்களால் தவிர்க்கப் பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், ''ஒப்பரேசன் லிபரேசன்'' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது சிறிலங்கா அரசும், புலிகளை அழித்துவிடலாம் எனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

## எதிரியை நடுங்கவைக்கும் ஆற்றல் அதற்கு உண்டு

இதே சமயம், அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும், போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக் கூடிய சூழலும் தோன்றியது.



முதலாவது கரும்புலி மில்லர்

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

### ஆறு வருடங்களின் முன்னர்

1987ஆம் ஆண்டு ஆடி மாதம் 5 ஆம் திகதி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து, அம்முகாமைச் சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும், அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை, கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தான்

அன்றிலிருந்து இன்று வரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்தி விட்டோம். அதில் பல கரும்புலிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும் வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில் தான் இருக்கின்றார்கள். ஆனால், தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்குச் செல்லும் போதுகூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையுடன்தான் ஒரு புலிவீரன் செல்கிறான். சில வேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம்; அல்லது திரும்பி வரலாம்.

### சாவை முன்னரே தெரிந்தவர்கள்

ஆனால் கரும்புலிகளின் நிலை வேறுபட்டது. களம் புகுவதற்கு பல நாட்களின் முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப்போகிறேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்துகொண்டு தான், கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கின்றார்கள். [illegible] இருக்கும் பலநூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளைக் கருத்திலெடுக்காது, உடைந்து நொருங்கிப்போய்க் கிடக்கும் பாதை வழியே, சீராக - நிதானமாக - வெடி மருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து, தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்துக்குள், நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்தி சாதுரியமாக மீறி, வெடிமருந்துப் படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒருமுறை கப்பலைச் சுற்றி வந்து, குறித்த இலக்கில் மோதி, வெடிமருந்துப் படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற, ஒரு மனித மனம் இடம் கொடாது.

### உந்து விசை

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக் கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும்கூட பதற்றமின்றி, உறுதியுடன், குறிபிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ, முட்டாள்தனமாகவோ தன்னை அழித்துக்கொள்ள முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது. அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்துவிசையாக விளங்கும் உயரிய போர் வடிவம் தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றிகொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில்நுட்பத்தாலும் தடுக்கமுடியாததும், உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்கமுடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல, எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப்போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமுமாகும்.

### எதிரியை நடுங்க வைப்பது

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக் கொள்ளும்போது நிகழும் பூகம்பம் தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளிவிடுவதுடன், வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல்கொண்ட தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான உணர்வையும் ஊட்டிவிடுகின்றது

தேச பக்தியையும், வீர உணர்வையும் அடித்தளமாகக்கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால் உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்யமுடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

### முண்டியடிக்கும் புலி வீரர்கள்

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் கரும்புலித் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும்போது தன்னைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு வீரனும் வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காணமுடியாது. இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம்புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச் சாதனைகள், சிங்கள ஆளும்வர்க்கத்துக்குக் கிலியை உண்டு பண்ணுகின்ற அதேசமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத் தாக்கம், தமிழீழக் குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி!

✶

[நன்றி: விடுதலைப் புலிகள் ஆனி -1993]

## மக்களின் பாதுகாப்புக்கு அரசு முன்னுரிமை தரும்

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜூலை, 5

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும். இலங்கையில் உள்நாட்டு தகராறு தொடர்பாக சகல சமூகத்தவரின் நலன்களையும் கவனத்துக்கு எடுத்துக்கொண்டு சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்ற அரசாங்கத்தின் குறிக்கோள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கொழும்பில் கடந்த வியாழன் நடந்த வைபவம் ஒன்றில் பேசும்போது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். [ந-3]

## சுதந்திர பறவைகள் வெளிவருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 5

விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவின் வெளியீடான சுதந்திரப் பறவைகள் பத்திரிகையின் ஜூன் மாத இதழ் நாளை செவ்வாய்க் கிழமை வெளிவருகின்றது.

[த]

## கல்வி கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 5

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 8 ஆம் திகதி வியாழன் வரை மூன்று தினங்கள் நடைபெறும்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை, ஆங்கிலம், அழகியற் கலை தொடர்பான பொருள்கள் கண்காட்சியில் இடம்பெறும்.

யாழ். கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா கண்காட்சியைத் தொடக்கி வைப்பார். (த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநோயாளர் பிரிவில்:

# ஜூன் மாதத்தில் மட்டும் 28 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

அரியாலை ஜூலை 5

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 28 ஆயிரத்து 230 பேர் சிகிச்சை பெற்றனர். வைத்தியசாலையின் விடுதிகளில் 5ஆயிரத்து 70 பேர் தங்கியுள்ளனர்.

வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து இது தெரிய வந்தது.

காய்ச்சல், தடிமன், சளி, சுரம் ஆகிய நோய்களுக்கே அதிகமானோர் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

இதேவேளை—

யாழ். குடாநாட்டில் மலேரியா காய்ச்சலின் தாக்கம் சற்றுத் தணிந்திருப்பதாக யாழ். வைத்தியசாலையின் மலேரியா பிரிவினர் தெரிவித்தனர் (த-17)

### விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் பயிலுனருக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு இப் பயிற்சியை முடித்து வெளியேறியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் கந்தசாமி

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் கந்தசாமி 4 7-93 ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - செல்லம்மாவின் ஏக புத்திரனும், சிரோன்மணியின் அன்புக் கணவரும், கிரிஷா, யுதிஸ்திரன், ஹர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம், திருமதி தேவராணி தவகோபால், வி. இராசக்கோன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், எஸ். குலசேகரம், திருமதி கா. த. மகேஸ்வரி, சொ. அன்னலக்சுமி, கு. முத்துரதி, இ. அல்லிராணி ஆகியோரின் மைத்துனரும், திரு. திருமதி கனகராசா (மில்க்வைற்) அவர்களின் பெறா மகனுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (5.7-93) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்திற்கு தகனக் கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கனகராசா
(மில்க்வைற்)

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (26366)

## செல்வி தங்கம்மா ஆறுமுகம்

(இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன் கல்லூரி)

அராலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி தங்கம்மா ஆறுமுகம் 04-07-93 நேற்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் - பாக்கியம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருமதி. சிவரத்தினம் அம்பலவாணர், இளைப்பாறிய ஆசிரியைகள் திருமதி. திலகவதி விஸ்வரத்தினம், திருமதி அன்னம்மா திருவிளங்கம், காலஞ்சென்ற ஓவசியர் ஆறுமுகம் கயிலாயபிள்ளை, ஆறுமுகம் இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 04-07-93 (நேற்று) பி. ப. 4 மணிக்கு அராலி தெற்கிலுள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி அ. திருவிளங்கம்
(சகோதரி)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (26368)

## ஐயம்பிள்ளை செல்வராசா

(T T.V 27 சிறி 9063 லொறி உரிமையாளர்)

பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், புதுமடம், உடுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை செல்வராசா அவர்கள் நேற்றுக் காலமானார். இவர் புஷ்பராணி அவர்களின் அன்புக் கணவரும், ரவேந்திரன் (சுவீடன்), உதயகுமார் (சுவிஸ்), சுகந்தி, சகுந்தலா (மெமோறியல் பாடசாலை), முருகமூர்த்தி பாடசாலை மாணவர்களான சசிகலா, வரதராஜா, வசீகரன், ரதிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கணபதி - அழகம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மருமகனும், க. இராசேந்திரம் (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. இராஜஸ்ரீ
(மைத்துனர்)

ஆனந்த வயிரவர் கோவில் லேன்,
உடுவில் தெற்கு, புதுமடம்,
மானிப்பாய். (26369)

# யாழ்ப்பாண தமிழ் பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டு பண்டிதமணி

## பிறந்த தின விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், ஜூலை 5

"பண்டிதமணி ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் சின்னமாக விளங்குகின்றார். அவரை யாழ்ப்பாணத் தமிழ்ப் பாரம்பரியத்தின் தலைசிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்".

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 94 ஆவது பிறந்த தின விழாவில் உரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்தமாதம் 27ஆம் திகதி மேற்படி விழா நடைபெற்றது. இவ்விழாவை பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை ஒழுங்கு செய்திருந்தது.

பேராசிரியர் சிவத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பண்டிதமணி ஈழத்தமிழ்ப் பாரம்பரியத்தின் ஒட்டு மொத்த வடிவமாக விளங்கினார் என்பதை வெளிக்கொணரும் வகையில் அவரது ஆக்கங்களை வெளிப்படுத்த வேண்டும்" என்றார்.

பிறந்ததின உரை நிகழ்த்திய மாணவ பண்டிதர் க. சச்சிதானந்தன் கூறியதாவது;

"பண்டிதமணி கவிதை கற்பித்தற் கலை கைவந்தவர்; ஈழத்துத் தமிழறிஞர்களோ, புலவர்களோ தென்னகத்தாரிலும் உயர்ந்தவர்கள் என்பது அவருடைய மனக்கோலம்; அன்பினைந்திணை என்பது அவருடைய இலக்கிய கோட்பாடு"

"பண்டிதமணி கவிதை கற்பித்தல் என்ற கலையின் அடிப்படை விதிகளைப் பற்றிக்கொண்டு அந்தக் கலையைப் புதிதாக விரித்தார். பண்டிதமணியின் மறைவோடு கவிதை கற்பித்தலின் கடைசிக் கலைஞன் மறைந்து விட்டான் என்றே எண்ணத் தோன்றுகிறது என்றார்".

இவ்விழாவில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் முன்னைநாள் தலைவர் வேலணையூர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை பற்றிய நினைவுரையை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் திரு. செ. பாலச்சந்திரன் நிகழ்த்தினார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பண்டிதமணி நினைவாக நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளின் பரிசளிப்பு உரையை நிகழ்த்தினார். பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பரிசுகளை வழங்கினார். மாவை ஆதீனம் சண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் முறையே வாழ்த்துரையும், பிரார்த்தனை உரையும் நிகழ்த்தினார்கள். (க-111)

### இன்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டார். சந்ததிகள் கூட இயங்கமாட்டா.

தமிழீழ மக்கள் அனைவரும் வீரமறவர்களின் நினைவாக— அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு— இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கரும்புலிகள் நினைவாக நேற்று வட்ட ரீதியாக சிரமதானங்கள் நடந்தன. தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதியில் பல இடங்களில் நடந்த சிரமதானங்களில் போராளிகளும், பொதுமக்களும் பங்கு பற்றினர்.

கரும்புலிகள் நாளான இன்று வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

இன்றைய தினம் கரும்புலிகளின் உருவப் படங்கள் திறத்தல், நினைவுத் தூபிகள் திறத்தல், நினைவுக்கல் நடுதல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

வன்னி மாவட்டத்தில் கிளிநொச்சி கோட்டத்திலும், வவுனியா வட்டத்திலும் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வீதிகள் தோறும் அலங்கார வளைவுகளும், பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன. கரும்புலிகளின் தியாக வரலாற்றுச் சம்பவங்கள் இவற்றில் சித்திரிக்கப்பட்டுள்ளன. (ஓ-3)

### கிழக்கில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொமாண்டோ ரெஜிமென்ட் (First Commando Regiment), முதலாவது விசேட படையணி ரெஜிமென்ட் First Special Forces Regiment) ஆகியன அடங்கியுள்ளன.

இந்த ரெஜிமென்டுகள் தற்போது கிழக்கில் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன.

மட்டக்களப்புக்கு வடக்கே அண்மையில் மேற்கொள்ளப்பட்ட "கடற் காற்று" இராணுவ நடவடிக்கையின் போதும் இந்த அணிகளே பெரும்பாலும் களத்தில் செயற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அணிக்கே தற்போது புதிதாக ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். (உ-3)

### சம்பள..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரச ஊழியரின் சம்பள உயர்வுக் கொடுப்பனவை வழங்காது அடுத்த வருடத்துக்கு ஒத்திப்போட்டதை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் திரு. ஜி. எம். பிரேமச்சந்திராவும் கடுமையாகக் கண்டித்தார்.

அரசு நடைமுறைப்படுத்தி உள்ள விலை உயர்வுகள், சம்பள உயர்வு நிறுத்தம் என்பன அரசாங்கம் உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகவும்—

அரசின் இந்தப் பொருளாதாரச் சிக்கல் நிலைக்குப் பாதுகாப்பு செலவு அதிகரிப்பே பிரதான காரணம் என்றும் பி.பி.ஸி. சிங்கள சேவையின் கொழும்புச் செய்தியாளர் ... தெரிவித்தார். (அ-6)

# இலங்கைத் தொழிலாளர்கள் பலர் மலேசியாவில் அவதி

மலேசியாவில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் பலர், தமக்கு தொழில் அனுமதிப் பத்திரம் கிடைக்கவில்லை என்று பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

மேற்படி இலங்கையர்களை கொழும்பில் இருந்து கூட்டிச் சென்ற முகவர் நிலையம் இதற்கு தாம் பொறுப்பல்ல என்று கைவிரித்துள்ளது. இந்த முகவர் நிலையத்தின் பணிப்பாளர்களில் முக்கியமானவர் ஓர் அமைச்சர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் மலேசியா செல்வதற்கு ஒருவரிடம் இருந்து 75 ஆயிரம் ரூபா முதல் 80 ஆயிரம் ரூபா வரை கட்டணம் அறவிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## சிறுப்பிட்டி அரசினர் பாடசாலையில்

# தரையில் இருந்து கற்கும் நிலையில் மாணவர்கள்!

அச்சுவேலி ஜூலை 5

சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களில் சுமார் 120 பேர் தரையில் இருந்தே கல்வி கற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட மற்றும் தளபாட வசதிகள் இல்லாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் நெருக்கடியான நிலையில் வகுப்புக்கள் நடைபெறுவதாகவும், ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தரையில் இருந்தே கல்வி கற்கின்றனர் என்றும் பெற்றோர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (த-11)

## உள்நாட்டில் நெருக்கடி நிலைமை

# பாக். இராணுவத் தளபதியின் வெளிநாட்டுப் பயணம் ரத்து!

இஸ்லாமபாத், ஜூலை 5

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஹமத் வாகித் தனது சோமாலிய நாட்டுப் பயணத்தைக் கடைசி நிமிடத்தில் ரத்துச்செய்துவிட்டார்.

பாகிஸ்தானில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே அதிகாரப் போட்டி உச்சகட்டத்துக்கு வந்துள்ளதை அடுத்தே இராணுவத் தளபதி இந்த முடிவை எடுத்து இருக்கிறார் என்று தெரியவருகிறது.

அதிகாரப் போட்டியால் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைத் தீர்க்க பிரதமர் நவாஸ் ஷெரீபுக்கு இராணுவத் தளபதி இருவார காலக்கெடு ஒன்றை விதித்து இருப்பது தெரிந்ததே.

இதனிடையில்—

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடும்படி பிரதான எதிர்க்கட்சிகள் பிரதமர் ஷெரீபைக் கேட்டு உள்ளன. (உ-எ)

### தனியார்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வற்றுடன் இணைந்து செல்லக் கூடிய விதத்தில் தனது சிபார்சை விரைவில் அமுல் நடத்தும்படி உலக வங்கி அரசைக் கோரியுள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு கொழும்பு வந்த உலக வங்கிக் குழு ஒன்று பல்கலைக்கழகங்களின் உப வேந்தர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் மற்றும் அமைச்சு அதிகாரிகள் ஆகியோருடன் இது குறித்துப் பேசி இருந்தது. (இ-எ)

### காஷ்மீர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கரையோர பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பற்றியும் முக்கியமாக ஆராயப்பட்டது. இந்த நடவடிக்கைகள் பற்றி பாதுகாப்பு அமைச்சுக்கு விளக்கிக் கூறப்படும் என்று ராஜேஸ் பைலட் சொன்னார். (உ-த)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெறறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org